# <u>In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.</u>

EA.No.2/2025 In Ep.No.9/2023 In OS.No.338/2010 தேதி-01.09.2025
(P.W.1) - ஜெயபால்

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் எத்தனை ஆண்டுகளாக கேரளாவில் வசித்து வருகிறேன் என்றால் 10 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். நான் வசித்து வரும் வீட்டின் முகவரி தெரியுமா என்றால் செங்கநல்லூர் ஆகும். நான் என் குடும்பபத்துடன் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்சொன்ன அசல் வழக்கு எண்.338/2010 என்ற வழக்கு தாக்கல் செய்து 15 ஆண்டுகள் என்றால் சரிதான். இவ்வழக்கு வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன தீர்ப்பில் ரூ.46,715/- என்று தீர்ப்பு வழங்கப்பட்ட தேதியில் இருந்து செலுத்தப்படவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. வாதி செல்வராஜ் வயதானவர் என்றால் அதுபற்றி தெரியாது. இவ்வழக்கு பற்றி எனக்கு என்ன தெரியும் என்றால் எதுவும் தெரியாது. நீதிமன்றதில் இவ்வழக்கு நடைபெற்று வருகிறது என்றா விவரம் எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் நீதிமன்றத்தில் இருந்து வரப்பட்ட நோட்டீஸ்ன் படி தெரியும்.

2. இம்மனுவில் எதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் வழக்கறிஞர் சொல்லிதான் சாட்சியம் அளிக்க வந்தேன். இவ்வழக்கு தொடங்கிய தேதியில் இருந்து தற்போது வரை ஒரே வழக்கறிஞர் என்றால் சரியல்ல. வழக்கறிஞர்களின் பெயர்களை சொல்ல முடியுமா என்றால் தெரியாது. Vakalath யார் தாக்கல் செய்தார் என்றால் என் அப்பா தான் வழக்கை நடத்தி வந்தார். வழக்கி பற்றிய எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்சொன்ன நிறைவேற்று மனு வில் சொல்லப்பட்டுள்ள மனு சொத்தை வாதிக்கு வழங்க எனக்கு ஆட்சசேயபனை இல்லை என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் என் பாட்டன் சொத்தாகும். வாதி செல்வராஜ் பெயரில் ஏதாவது விலை ஆவணம் மனு பட்டிகை சொத்தை பொருத்து உள்ளதா என்றால் அதுபற்றி தெரியாது. வாதிக்கு உரிமைப்பட்ட சொத்து என்பதாலும் எங்களுக்கு மனு சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை என்று விசாரனை நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு பற்றிய விவரம் தெரியும் என்றாலும் வாதி வயதானவர் என்பதால் வழக்கை நீடிக்க வேண்டும் என்று இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி

நிறைவேற்று மனு நிலுவையில் உள்ளது சம்மந்தமாக Paper Publication செய்துள்ளார் என்றால் நான் படிக்கததால் அதுபற்றி தெரியாது. நான் மனு சொத்தை வாதிக்கு கைவசம் கொடுக்க கூடாது என்பதாலும் மனுவை நீடிக்க வேண்டும் என்றாலும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.